Tamil

# கார்பன் மோனாக்ஸைட் பற்றிய விழிப்புணர்வு

## கார்பன் மோனாக்ஸைட் என்பது என்ன? (CO)?

CO என்பது நிசப்தமான அல்லது கண்ணுக்கு புலப்படாத கொலையாளியாகும், ஏனெனில் நம்மால் அதைப் பார்க்க, நுகர அல்லது ருசிக்க முடியாது.



## எச்சரிக்கை

## CO விற்கான சாத்தியமான ஆதாரங்கள் என்னென்ன?

ஒன்ட்டாரியோவில் இருக்கின்ற பல வீடுகளிலும் சராசரியாக **4-6** எரிபொருள் எரிக்கின்ற சாதனங்கள் உள்ளன, இவைதான் கார்பன் மோனாக்ஸைட்-ஐ உற்பத்தி செய்கின்றன.




### கார்பன் மோனாக்ஸைட் உண்டாக பொதுவான ஆதாரம்

1. விறகு அடுப்பு
2. மண்ணெண்ணெய் அடுப்பு
3. கார்
4. பார்பேக்
5. கையில் எடுத்துச் செல்லக்கூடிய மின்னுற்பத்தி சாதனம்
6. தண்ணீர் சூடாக்கும் சாதனம்
7. பெரிய அடுப்பு-ஃபர்னஸ்
8. உலர்த்தி
9. அடைபட்ட வெண்ட்-கள் அல்லது சிம்னிகள்

கார்பன் மோனாக்ஸைட்-க்கு ஆட்படுவது மனிதர்களுக்கும் செல்லப் பிராணிகளுக்கும் அபாயகரமானது!

ஒன்ட்டாரியோவில் கார்பன் மோனாக்ஸைட் காரணமான இறப்புக்கள் மற்றும் காயங்களில் **65%** க்கும் மேலானவை வீடுகளில்தான் ஏற்படுகின்றன.

## CO காரணமான விஷத்திற்கு ஆட்படுவதன் அறிகுறிகள் மற்றும் அடையாளங்கள்



- கடுமையானதலைவலி
- நிதானமில்லாமை

- குமட்டல்
- வாந்தி

- கிறக்கம்
- குழப்பம்

- அசதி
- சோர்வு

- தூக்கக் கலக்கம்
- சுய நினைவு இல்லாமை

# நடவடிக்கை எடுக்கவும்

# உங்கள் வீட்டில் கார்பன் மோனாக்ஸைட் (CO) விஷத்திற்கு ஆட்படுவதிலிருந்து உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்




உங்கள் வீட்டில் எரிபொருள் எரியக்கூடிய சாதனம், அடுப்பு அல்லது இணைக்கப்பட்ட வாகனநிறுத்த கொட்டகை இருக்கிறது என்றால், ஒரு CO அலாரம் தேவை –

## ஒன்ட்டாரியோவில் இது சட்டப்படியானது

## வேலை செய்யும் நிலையில் இருக்கின்ற (CO) எச்சரிக்கை மணி (களை) நிறுவி, பரிசோதித்து பேணி வாருங்கள்.

| | |
|---|---|
|   | உறங்கும் இடங்கள் **அனைத்திற்கும்** அருகில் **வேலை செய்யும் நிலையில்** இருக்கின்ற **(CO)** எச்சரிக்கை மணி (களை) நிறுவுங்கள். |
|  | எச்சரிக்கை மணிகளை **மாதம்தோறும் ஒரு முறை** அழுத்திப் பிடித்தால் பீப் (எச்சரிப்பு) ஒலி கேட்கிறதா என்று **பரிசோதியுங்கள்;** |
|  | **வருடம் ஒரு முறை** அல்லது பேட்டரி குறைகிறது என்று எச்சரிப்பு கொடுக்கும் ஒலி (ரீங்காரம்) கேட்டவுடன் **பேட்டரிகளை மாற்றுங்கள். ஒருபோதும் காத்திருக்காதீர்கள்!** புதிய பேட்டரிகளைப் பொருத்தியவுடன் எச்சரிக்கை மணி ஒலிக்கிறதா என சரிபார்த்துக் கொள்ளுங்கள். |
|   | **காலாவதியாகிவிட்ட எச்சரிக்கை மணிகளை மாற்றிவிடவும்.** மாற்றி வைக்கவேண்டிய தேதி எது என சரி பாருங்கள் அல்லது தயாரிப்பாளரின் அறிவுறுத்தலின்படி மாற்றிவிடுங்கள். * **காலப்போக்கில் CO எச்சரிக்கை மணிகள் தங்கள் உணர்திறனை இழந்துவிடும் – அவை எக்காலமும் நீடித்துழைக்க மாட்டா.** |

## CO எச்சரிக்கை மணி ஒலித்ததும் என்ன செய்ய வேண்டும் என தெரிந்து வைக்கவும்.




ஒருபோதும் எச்சரிக்கை மணி ஒலியை **உதாசீனம் செய்யாதீர்கள்,** ஆதாரம் எதுவென கண்டுபிடிக்க முயற்சி செய்யுங்கள்! **ஏன்?** உங்கள் வீட்டுக்குள் சாத்தியமாகவே ஒரு பேராபத்து இருப்பது பற்றி அது **உங்களை** எச்சரிக்கிறது.

**வெளியேறி விடுங்கள், வெளியிலேயே இருந்துவிடுங்கள் மற்றும் உடனடியாக 9-1-1** ஐ **அழையுங்கள்**



எச்சரிக்கிறது



வீட்டைவிட்டு வெளியேறுங்கள்




**9-1-1** ஐ அழையுங்கள்

BRAMPTON FIRE EMERGENCY SERVICES

**905.458.5580**
**bramptonfire.com**
**firelife@brampton.ca**

**BramptonFire**
**@BramptonFireES**

BRAMPTON